


**17. 03. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தனிநபருக்கான வாய்ப்புகளின் கருவியாக கல்வி திகழ்கிறது என்று குடியரசு தலைவர் திருமதி திரெளபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. மக்களவையிலிருந்து 8 எதிர்கட்சி உறுப்பினர்களின் இடைநீக்க உத்தரவை ரத்து செய்வதற்கான தீர்மானம் இன்று நிறைவேறியது.

3. சென்னையிலிருந்து 2ஆவது நாளாக வளைகுடா நாடுகளுக்கு விமானங்கள் இன்றும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

4. உரிய ஆவணங்கள் இன்றி 50 ஆயிரத்திற்கும் மேல் ரொக்கப்பணத்தை எடுத்து செல்ல வேண்டாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்கள் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

5. Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் ஃபிரான்ஸில் இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

**************

குடியரசு தலைவர்

தனிநபர் வாழ்வில், வாய்ப்புகளின் கருவியான கல்வி, வெற்றிக்கு வித்திடுவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று உரையாற்றிய அவர், ஆளுமை மற்றும் திறன் கட்டமைப்புக்கான வடிவமைப்புகள், பள்ளி கல்வி பருவத்திலேயே தொடங்கிவிடுவதாக குறிப்பிட்டார்.

பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை முன்னெடுத்து செல்லும் பிரதமரின் ஊட்டச்சத்து மதிய உணவு திட்டம், வலுவான, ஆரோக்கியமான தேசத்திற்கு வகை செய்வதாக தெரிவித்தார்.

குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டசத்து குறைபாடுகளை சரிசெய்யவும், ஆரம்ப கல்விக்கான தடைகளை களைவதிலும் இத்திட்டம் முக்கிய பங்காற்றுவதாக குடியரசு தலைவர் எடுத்துரைத்தார்.

**************

அமித்ஷா

போதை பொருள் தடுப்பு பிரிவின் எழுச்சி தினத்தை ஒட்டி உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா இப்பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தமது வாழ்த்துக்களை உரித்தாக்கியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தொலைநோக்கு திட்டமான போதை பொருட்கள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான கடமை உணர்வும், பொறுப்புணர்வும் இவர்களுக்கு உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தேசத்தில் உள்ள இளையோரை போதை பழக்கங்களிலிருந்து காக்கும் அறனாக இம்முகமை திகழ்வதாக சுட்டிக்காட்டினார்.

போதை பொருள் தடுப்பு பிரிவினரின் அர்ப்பணிப்பு மற்றும் தேசப்பற்றிற்கு நாடு தலைவணங்குவதாக திரு.அமித்ஷா குறிப்பிட்டார்.

**************

இடைநீக்கம்

மக்களவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட 8 எதிர்கட்சி உறுப்பினர்களின் தற்காலிக நீக்க உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதற்கான தீர்மானம் மக்களவையில் இன்று நிறைவேறியது,

இந்த 8 உறுப்பினர்களும் பட்ஜெட் கூட்டத்தொடரின்போது அவை விதிகளை மீறி செயல்பட்டதாக கூறி சென்ற மாதம் 3ஆம் தேதி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

**************

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில், மத்திய அரசு குறைந்த பட்ச ஆதரவு விலையில் அவற்றை கொள்முதல் செய்வதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், இந்தாண்டு கோதுமை, நெல், எண்ணெய் வித்துக்கள் பருப்பு வகைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிக்கப்பட்டதாக எடுத்துரைத்தார்.

துவரம், மசூர், உளுந்தம்பருப்புகள் அதிக அளவில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்ய அரசு முடிவு செய்திருப்பதாகவும் கூறினார்.

பயிர் காப்பீட்டு திட்டத்தில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, அத்திட்டத்தின் பலன்கள் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் அது திருத்தி அமைக்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

பயிர் காப்பீடு திட்டத்தில் புகார் இருப்பின் விவசாயிகள் இணையதளத்தில் அவற்றை பதிவு செய்யலாம் என்றும் கூறினார்.

**************

பியூஷ்கோயல்

மேற்காசியா நெருக்கடியின் மத்தியிலும் இந்திய பொருளாதாரம் வலுவாக உள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்த உலக நாடுகளிடையே ஆர்வம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த 3 ஆண்டுகளில், 38 நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளதாக கூறிய அவர், இதனால்

ஏற்றுமதியாளர்களுக்கு வாய்ப்புகள் உருவாகியுள்ளதாக தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தங்கள் செயலாக்கத்திற்கு வரும்பொழுது, ஏற்றுமதியாளர்கள் பெருமளவிலான பயன்களை பெறுவார்கள் என்றார்.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் ஏற்றுமதி குறைந்ததாகவும், இரண்டாவது வாரத்தில் ஆக்கப்பூர்வமாக இருந்ததாகவும், இம்மாத இறுதியில் மேலும் வளர்ச்சிபெறும் என்றும் குறிப்பிட்டார்.

சர்வதேச வர்த்தகத்தில் இந்தியாவிற்கு புதிய அத்தியாயம் தொடங்க உள்ளதாகவும் திரு.பியூஷ்கோயல் கூறினார்.

**************

ஆதார்

அங்கீகாரம் பெறாத சமையல் எரிவாயு நுகர்வோருக்கு மட்டுமே ஆதார் சரிபார்ப்பு தேவை என்று மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

பயோ மெட்ரிக், ஆதார் சரிபார்ப்பு கட்டமைப்பின் கீழ், அதிக அளவு நுகர்வோர் இணைவதை ஊக்குவிப்பதற்காகவே அரசு இத்திட்டத்தை செயல்படுத்துவதாக மத்திய பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுவரை ஆதார் கட்டமைப்பு சரிபார்ப்பின் கீழ் பதிவு செய்யாதவர்களுக்கு மட்டுமே மின்னணு வாடிக்கையாளர் சரிபார்ப்பு தேவை என்றும் கூறியுள்ளது.

நுகர்வோர் வீடுகளில் இருந்தபடியே வாடிக்கையாளர் சரிபார்ப்பு கட்டமைப்பின் கீழ் இணையதளம் மூலமாக இணையலாம் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

**************

விமானம்

சென்னையிலிருந்து இன்று இரண்டாவது நாளாக வளைகுடா நாடுகளுக்கு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

துபாய், அபுதாபி, குவைத், பஹ்ரைன், தோஹா, மஸ்கட், சார்ஜா உள்ளிட்ட நாடுகளுக்கு புறப்பாடு மற்றும் வருகை என 20 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் பயணிகள் சிரமத்திற்குள்ளாயினர்.

ஏற்கனவே முன்பதிவு செய்திருந்தவர்களுக்கு விமான கட்டணங்களை திருப்பி செலுத்த அந்தந்த விமான நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதனிடையே ஈராக் தலைநகர் பக்தாத் மற்றும் கத்தார் தலைநகர் தோஹாவில் வான் தாக்குதல் நடவடிக்கைகள் இன்று தொடர்ந்து நடைபெறுகின்றன.

பக்தாத்தில் அமெரிக்க தூதரகத்தின் பசுமை மண்டலத்தை இலக்காக கொண்டு இந்த தாக்குதல் நடைபெற்றது.

**************

பறக்கும் படை

தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன.

திருவாரூரில் உரிய ஆவணங்கள் இன்றி இருசக்கர வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட ஒரு லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் ரொக்கமும்,

ஒசூர் அருகே இருவேறு இடங்களில் 44 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் ரொக்கமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தூத்துக்குடி, ராணிப்பேட்டை, தென்காசி யில் நடைபெற்ற வாகன சோதனையில் ஆவணங்கள் இன்றி கொண்டுசெல்லப்பட்ட 16 லட்சம் ரூபாய் ரொக்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம், சிவகங்கை மாவட்டங்களில் பறக்கும் படையினரின் கண்காணிப்புகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக மாவட்ட தேர்தல் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

*************

பதற்றமான வாக்குச்சாவடி

பெரம்பலூர் மாவட்டத்தில் பதற்றமான 35 வாக்குச்சாவடிகளிலும்,

திருவாரூர் மாவட்டத்தில் பதற்றமான 54 வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்படும் என்று, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில் உரிமம் பெற்ற துப்பாக்கிகளை அருகில் உள்ள காவல் நிலையங்களில் உடனடியாக ஒப்படைக்குமாறு மாவட்ட ஆட்சியர் திரு.மோகன சந்திரன் கூறியுள்ளார்.

*************

நாகை

நாகை மாவட்டத்தில் பொதுமக்கள் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கையில் எடுத்துச்செல்ல வேண்டாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.ஆகாஷ் அறிவுறுத்தியுள்ளார்.

வாய்ஸ்

**************

கொடி அணிவகுப்பு

செங்கல்பட்டு மாவட்டத்தில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் வகையில் சேலையூர்சரக காவல்துறை சார்பில் நூற்றுக்கும் மேற்பட்ட துணை ராணுவத்தினர் மற்றும் காவலர்கள் பங்கேற்ற கொடி அணிவகுப்பு இன்று நடைபெற்றது.

**************

விழிப்புணர்வு

ஈரோட்டில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

விழுப்புரத்திலும் 100 சதவிகித வாக்களிப்பை உறுதி செய்யும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

**************

கடத்தல்

புதுச்சேரியிலிருந்து கிருஷ்ணகிரிக்கு இருசக்கர வாகனம் மூலமாக கடத்தப்பட்ட மதுபாட்டில்கள்

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே இன்று பறிமுதல் செய்யப்பட்டது.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே மினி லாரியில் கடத்தி செல்லப்பட்ட 6 டன் ரேசன் அரிசி கைப்பற்றப்பட்ட்தோடு வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது.

**************

ஆர்பாட்டம்

தமிழ்நாட்டில் போதை பொருள் புழக்கம், விலைவாசி உயர்வை திமுக அரசு கட்டுப்படுத்த தவறியதாக கூறி தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் இன்று ஆர்பாட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி சிதம்பர நகர் பேருந்து நிறுத்தத்தில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் பிஜேபி பாட்டாளி மக்கள் கட்சி, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், புரட்சி பாரதம், பெருந்தலைவர் மக்கள் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர்.

விழுப்புரம், வேலூர் மதுரை கடலூரிலும் இத்தகைய ஆர்பாட்டங்கள் நடைபெற்றன.

**************

நயினார் நாகேந்திரன்

தமிழ்நாட்டில் வரும் சட்டமன்ற தேர்தலில் பண பலம் இல்லாமல் மக்கள் பலமே வெற்றிபெறும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களை ஏமாற்றும் வகையில் தமிழக அரசு அறிவிப்புகளை வெளியிடுவதாக குறை கூறினார்.

**************

திமுக

சென்னையில் திமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுக்கான நேர்காணல் திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று தொடங்கியது.

**************

ஆடு விற்பனை

ரமலான் பண்டிகையை ஒட்டி நெல்லை மேலபாளையம் ஆட்டுசந்தையில் மூன்றரை கோடி ரூபாய்க்கு ஆடுகள் விற்பனை இன்று நடைபெற்றுள்ளது.

நெல்லை தென்காசி தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டுள்ளது.

**************

பேட்மிண்டன்

Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் ஃபிரான்ஸில் இன்று தொடங்குகின்றன.

இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், ஆயுஷ் ஷெட்டி, தன்வீ ஷர்மா, தருண் மன்னேபள்ளி உள்ளிட்டோர் இதில் களமிறங்குகின்றனர்.

ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் அர்ஜூன், ஹரிஹரன் இணை – செக்குடியரசு இணையை இன்று எதிர்கொள்கிறது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது